2026 ஏப்ரல் மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S.No.70/2018 C/w. O.S.33/2020

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 – ஆம் தேதி புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – மனோஜ் |
| தந்தை பெயர்: | அருள் |
| ஊர்: | ராயப்பன்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 46 |

22.04.2026

(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).
சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை–

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 22.11.2010ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு அடமான பத்திரம் (எண்.2963/2010) | **வா.சா.ஆ.1** | அசல் |
| 2. | 10.10.2018ம் தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | **வா.சா.ஆ.2** | அலுவலக நகல் |
| 3. | 15.10.2018ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு | **வா.சா.ஆ.3** | சார்பு செய்யப்பட்ட அறிவிப்பு |
| 4. | 14.10.2018ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் (ஒத்திப் பத்திரம்) | **வா.சா.ஆ.4** | அசல் |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**:- பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 22.04.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.22 18:06:21 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
22.04.2026.